# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.06.02 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## அபாயகரமான விலங்குகள்
## (திருத்தம்)

***(49 ஆம் அத்தியாயமான) அபாயகரமான விலங்குகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** **:** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (*49* ஆம் அத்தியாயமான) அபாயகரமான விலங்குகள் கட்டளைச் சட்டத்தின் *7* ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் முறியை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கானதுமாகும்.

***வாசகம் 3*** **:** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *8* ஆம் பிரிவை அபாயகரமான விலங்கை அழித்தலில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை குறித்துரைப்பதன் மூலம் திருத்துகின்றது.

ச.வ.-ஓ. 47/2021

**(49ஆம் அத்தியாயமான) அபாயகரமான விலங்குகள் கட்டளைச்சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (49 ஆம் அத்தியாயமான) அபாயகரமான விலங்குகள் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஆயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. 49 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, "அவருக்கு மேலும் அறிவித்தலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன்மூலம் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

"அவருக்கு மேலும் அறிவித்தலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய விலங்கை அழித்தலானது அத்தகைய விலங்குக்கு வலி அல்லது துன்பம் எதுவும் விளைவிக்கப்படாத மனிதாபிமான முறையொன்றில் பதிவுசெய்யப்பட்ட விலங்கு மருத்துவரால் அல்லது பதிவுசெய்யப்பட்ட விலங்கு மருத்துவத் தொழிலரினால் அல்லது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ தொழிலர்கள் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பந்தியின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.".

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்